# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
## முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
## எம்.சி.ஓ.பி. எண். 117/2019

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

எ.ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. பூர்ணிமா | | |
| த/பெ. | ராஜிவ் | வட்டம் | திருவள்ளூர் |
| கிராமம் | சீவாரம் | வயது | 48 |
| தொழில் | சட்ட மேலாளர் (ஸ்ரீராம் ஜெனர் இன்சூரன்ஸ் கம்பெனி) | மாவட்டம் | திருவள்ளூர் |

**முதல் விசாரணை**

1. நான் 2 ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் சட்ட மேலாளராக பணிபுரிகிறனே். நான் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்டது அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான்.

## <u>எதிர்மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ 1 | அதிகார கடிதம் அசல் |
| எ.ம.சா.ஆ 2 | இன்சூரன்ஸ் பாலிசி நகல் |
| எ.ம.சா.ஆ 3 | புகார் மனு நகல் |
| எ.ம.சா.ஆ 4 | புகார் மனு நகல் |
| எ.ம.சா.ஆ 5 | அஞ்சல் ஒப்புதல் அட்டை நகல் |
| எ.ம.சா.ஆ 6 | எம்.ச.ஓ.பி 144/2019 உத்தரவு நகல் |

## மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்க இந்த வழக்கை பற்றி நேரடியாக தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து 2019 ம் வருடம் நடந்தது. 2019 ம் வருடம் விபத்து குறித்து எங்களுக்கு தகவல் கிடைத்தது. 09.07.2025 ல் தான் நாங்கள் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். தகவல் கிடைத்ததும் நாங்கள் எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இழப்பீடு வழங்க கூடாது என்பதற்காகதான் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. காலத்தாமதமாக நடவடிக்கை எடுத்ததால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி